IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.

O.S.No. 293/2009

DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.40 PM

<u>வா.சா. 1 சாட்சி ஜெயராஜ் த.பெ.சேதுராமத்தேவர்</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 11.08.2025 in accordance with the provisions of Act XX141.**

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. நான் இவ்வழக்கை பொன்னம்மங்கலம் கிராமத்து சார்பாக பிரதிநிதித்துவ அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் உரப்பனூர் கிராம நபர்களை உரப்பனூர் கிராம பிரதிநிதிகள் ஸ்தானத்தில் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் 245 ஏக்கர் கண்மாய் உள்ளதாக பிராதில் கூறியுள்ள நிலையில் மேற்படி விஸ்தீரணத்திற்கு ஆதரவாக என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சிட்டா தாக்கல் செய்துள்ளேன்.

2. 1 முதல் 4 வாதிகளின் தனிநபர்கள் பெயரில் உள்ள பட்டா நிலங்களுக்கான பட்டா பாஸ்புத்தகம் வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ4 வரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ. 4 வரையிலான ஆவணங்களில் வழக்கு சொத்தின் புல எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3. வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ4 வரையிலான நிலங்களுக்கு வழக்கு சொத்து கண்மாய் மூலம்தான் நீர்பாசனம் வருகிறது என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞருக்குதான் தெரியும். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா கிராமத்திற்கு வரகூடிய நீர்வரத்து என்பது பொன்னம்மங்கலம் பெரியகண்மாய் என்றும் அதில்

பிரதிவாதிகளுக்கு தண்ணீர் எடுக்க உரிமையில்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

4. தாவா சொத்தானது அரசு வகைப்பாட்டில் கட்டுப்பட்டது என்றால் சரிதான். எங்களது பரிகாரத்தில் கருமாத்தூர் பஞ்சாயத்தை சேர்ந்த வடக்கம்பட்டி கிராம சர்வே எண்.117 ல் பிரதிவாதிகள் எந்தவித வாய்காலும் ஏற்படுத்தகூடாது என பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் மேற்சொன்ன புல எண் உசிலம்பட்டி தாலுகாவில் கட்டுப்பட்டுள்ளது.

5. நான் கேட்டுள்ள பரிகாரமானது சமூகம் நீதிமன்றத்திற்கு கட்டுப்பட்டுள்ள பரிகாரம் இல்லை என்றால் சரியல்ல. கருமாத்தூர் கிராம சர்வே எண்.117 ல் உரப்பனூர் கிராமத்திற்கு பிரிந்து செல்லும் வாய்கால் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வாய்கால் மேடாக உள்ளதால் உரப்பனூர் கிராமத்திற்கு நீர்வரத்து தடை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. மேற்படி நீர்வரத்து தடைப்பட்டதால் உரப்பனூர் கிராம மக்கள் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரிடம் 13.02.2006 ம் தேதி மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி மனு சம்பந்தமாக உரப்பனூர் கிராமம் மற்றும் பொன்னம்மங்கலம் கிராமம் மக்களை அழைத்து சமாதானம் கூட்டம் நடத்தினார்கள் என்றால் சரிதான்.

7. மேற்படி சமாதான கூட்டத்தின் படி நீர்வளத்துறை மற்றும் வேளாண்மைத்துறை அதிகாரிகளை வைத்து கலந்து பேசி வருவாய்துறையினர் ஸ்தளம் பார்வை செய்தனர் என்றால் சரிதான். அனைத்து தரப்பு ஆவணங்களை பார்த்து வருவாய் கோட்டாட்சியர் 18.07.2006 ல் கருமாத்தூர் கிராமம் சர்வே எண்.117 ல் மேலவரப்பனூர் வரத்து கால்வாய் பிரிந்துசெல்லும் இடத்தில் மேடாக உள்ள கால்வாயை தூர்வார பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறைக்கு உரிய நிதிகளை வழங்கி பிறப்பித்தார் என்றால் சரியல்ல.

8. பிரதிவாதி கிராம மக்கள் மேற்படி பணியை மேற்கொள்ள சொல்லி பெரியார் வைகை வடிநிலகோட்டம் செயர்பொறியாளர் அவர்களை சந்தித்து 02.04.2007ல் மனு கொடுத்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேல்நடவடிக்கை எதுவும் எடுக்காததால் பிரதிவாதி கிராம மக்கள் மதுரை கூடுதல் ஆட்சியரை சந்தித்து மேற்படி பணிகளை மேற்கொள்ள உத்தரவு பிறப்பித்தார்களா என்றால் அது பற்றி தெரியாது.

9. பிரதிவாதி கிராம மக்கள் அவர்களது கோரிக்கைகள் சம்பந்தமாக உரிய அரசு துறைகளை அனுகி நடவடிக்கை எடுத்து வந்துள்ளனர் என்றால் சரியல்ல. அரசு அதிகாரிகள் அவர்களது பணியை மேற்கொள்ள நடிவடிக்கையை தடுத்து நிறுத்தவேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஆரம்ப காலத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

10. பிரதிவாதி கிராம மக்கள் தன்னிச்சையாக வாய்கால் வரப்பு மேட்டை சரிசெய்யவில்லை என்றால் 1ம் பிரதிவாதி ஜேசிப்பி வாகனத்துடன் தன்னிச்சையாக செயல்படவந்தார். அவ்வாறு 1ம் பிரதிவாதி எப்போது வந்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. ஜேசிப்பியுடன் வந்தது சம்பந்தமாக நாங்கள் காவல்துறையினருக்கோ, வருவாய்துறையினருக்கோ எந்தவித புகாரும் வழங்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி வழக்கிற்கு முக்கிய பிரச்சனையே தண்ணீர் வரகூடிய கண்மாய் கால்வாய் பிரச்சனையாகும். அதற்கு தமிழக அரசினை உரிய தரப்பினராக வழக்கில் சேர்த்திருக்கவேண்டும் என்றால் அது பற்றி எனது வழக்கறிஞருக்குதான் தெரியும்.

11. நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தானா 245 ஏக்கருக்கும் வாதி கிராமத்திற்கு தனித்த உரிமையில்லாததால் நாங்கள்

கோரியுள்ள விளம்புகை பரிகாரம் எங்களுக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. 245 ஏக்கரில் கண்மாய் நிலம் மட்டும் நிலம் உள்ளதா அல்லது பட்டா நிலமும் சேர்ந்துள்ளதா என்றால் கண்மாய் நிலம் மட்டுமே ஆகும். பிரதிவாதிகள் மீது எந்தவித வழக்குமூலமும் ஏற்படவில்லை என்பதாலும் அவர்கள் மீது தாக்கல் செய்துள்ள வழக்கு ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.